# இந்தியாவின் மாநிலங்களை அடையாளம் காண்பதில் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் "காட்சிப்படுத்துதல்" மூலம் மேம்படுத்துதல்.....செயலாய்வு.




**செயலாய்வாளர்**

**ஏ. ஜெகதீஸ்வரி,**

**முதுநிலை விரிவுரையாளர்,**

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**

**திருவூர் – 602 025. திருவள்ளூர் மாவட்டம்.**

**2023 –2024**

**ஒப்படைப்பு**

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**சென்னை – 600 006**

ஏ. ஜெகதீஸ்வரி,

முதுநிலை விரிவுரையாளர்,

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,

திருவூர் – 602 025. திருவள்ளூர் மாவட்டம்.

## உறுதிமொழி

"இந்தியாவின் மாநிலங்களை அடையாளம் காண்பதில் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் "காட்சிப்படுத்துதல்" மூலம் மேம்படுத்துதல் " என்னும் இந்தச் செயலாய்வேடு, என் சொந்த முயற்சியினால் உருவாக்கப்பட்டதெனவும் வேறெந்த ஆய்வரங்கிலோ கருத்தரங்கிலோ வெளியிடப்படவில்லை எனவும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

(ஏ. ஜெகதீஸ்வரி)

## நன்றியுரை

செயலாய்வு நிகழ்த்த ஒப்புதல் அளித்துதவிய மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கும் செயலாய்வுத் தலைப்பினைப் பார்வையிட்டும் செயலாய்வு முன்வரைவில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளுதல் குறித்த கருத்துகள் வழங்கியும் வழிகாட்டிய ஆய்வுக்குழு உறுப்பினர்களுக்கும் செயலாய்வு நிகழ்த்த ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய நிறுவன முதல்வருக்கும் நற்கருத்துகள் வழங்கி, ஆய்வைச் செம்மையாக நிகழ்த்துவதற்கு உதவிய முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் உயர் தொடக்கநிலை ஆசிரியர்களுக்குச் செயலாய்வு மேற்கொள்ள அனைத்து உதவிகளையும் செய்த திருவள்ளூர் மாவட்டம், முதன்மைக்கல்வி அலுவலர் , மாவட்டக்கல்வி அலுவலர் அவர்களுக்கும் பூவிருந்தவல்லி ஒன்றியம் வட்டாரக்கல்வி அலுவலர் அவர்களுக்கும் , பூவிருந்தவல்லி ஒன்றியம், சென்னீர்குப்பம், அரசினர் மேல்நிலைப்பள்ளி, தலைமை ஆசிரியர் முனைவர். என் .பூபாலமுருகன் அவர்களுக்கும், பயிற்சியில் பங்குப் பெற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ. ஜெகதீஸ்வரி)

**பொருளடக்கம்**


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | செயலாய்வுத் தலைப்பு | 1 |
| 3 | பிரச்சினைகளை அடையாளம் காணல் | 1 |
| 4 | கருதுகோள்கள் | 2 |
| 5 | செயலாய்வு நோக்கங்கள் | 2 |
| 6 | செயலாய்வு மாதிரிகள் | 2 |
| 7 | செயலாய்வுக் கருவி | 2 |
| 8 | முன்தேர்வு | 2 |
| 9 | கற்பித்தல் செயல்முறைகள் | 5 |
| 10 | பின்தேர்வு | 14 |
| 11 | முன்தேர்வு – பின்தேர்வுப் பகுப்பாய்வு | 21 |
| 12 | தீர்வுகள் | 24 |
| 13 | முடிவுரை | 25 |
| 14 | பின்னிணைப்பு<br>முன்தேர்வு / பின்தேர்வு வினாத்தாள் | 26 |
| | நிழற்படங்கள் | 31 |

## "இந்தியாவின் மாநிலங்களை அடையாளம் காண்பதில் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் "காட்சிப்படுத்துதல்" மூலம் மேம்படுத்துதல்" – செயலாய்வு.

### முன்னுரை

இந்தியா உலகின் ஏழாவது பெரிய நாடு மற்றும் இரண்டாவது மக்கள் தொகை கொண்ட நாடு. அதிகாரப்பூர்வமாக இந்திய குடியரசு என்று அழைக்கப்படுகிறது. 1950ல், இந்திய அரசியல் சட்டம் நடப்புக்கு வந்ததுடன், பலவகையான மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. மிகப் பெரியது முதல் சிறியது வரை ஒவ்வொரு மாநிலமும் நில வாரியாக, வரலாற்று வாரியாக, கலாச்சாரம், மொழி, பண்பாடு வாரியாக வித்தியாசங்களைப் பெற்றிருக்கும், இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் / யூனியன் பிரதேசமும் தனித்துவமான மக்கள்தொகை, வரலாறு, கலாச்சாரம், உடை, திருவிழாக்கள் மற்றும் மொழி போன்றவற்றைக் கொண்டுள்ளது. இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களின் பெயர்களையும் மற்றும் அமைவிடத்தையும் மாணவர்கள் அறிந்து கொள்ளவும் இச்செயலாராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

### செயலாய்வுத் தலைப்பு

இந்தியாவின் மாநிலங்களை அடையாளம் காண்பதில் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் "காட்சிப்படுத்துதல்" மூலம் மேம்படுத்துதல்.

### பிரச்சினைகளை அடையாளம் காணல்

இந்தியாவில் 28 மாநிலங்களும் 8 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. ஒவ்வொரு மாநிலமும் தனித்துவமானது. இந்தியாவில் வளமான பன்முகத்தன்மை கொண்ட கலாச்சாரம், பாரம்பரியம், மொழி, வளங்கள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள், மக்களின் திருவிழாக்கள் போன்றவை உள்ளன.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியாவில் உள்ள மாநிலங்களை அறிந்துகொள்வதிலும் , அடையாளம் காண்பதிலும் சிக்கல்கள் இருக்கின்றன என்பது பள்ளிப் பார்வையின் போது கண்டறியப்பட்டது. எனவே பெருமை வாய்ந்த இந்திய மாநிலங்களை அறிந்துகொள்ள இச்செயலாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

**கருதுகோள்கள்**

செய்து கற்றல், விளக்குதல் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயலாய்வு, மாணவர்களுக்கு இந்தியாவில் உள்ள மாநிலங்களின் பெயர்களையும் அவற்றின் அமைவிடங்களையும் அறிந்து கொள்ள இச்செயலாராய்ச்சி உறுதுணையாக அமையும்.

**செயலாய்வு நோக்கங்கள்**

1, இந்தியாவில் உள்ள மாநிலங்களின் பெயர்களை அறிதல்.

2. இந்தியாவில் உள்ள மாநிலங்களின் அமைவிடத்தை அறிதல்.

**செயலாய்வு மாதிரிகள்**

பூவிருந்தவல்லி ஒன்றியம், சென்னீர்குப்பம் அரசினர் மேல்நிலைப்பள்ளி ,

ஆறாம் வகுப்பு மாணவர்கள் 16 பேர்.

**செயலாய்வுக் கருவி**:

**முன்தேர்வு, பின்தேர்வு வினாத்தாள்கள்**

**முன்தேர்வு**

முன் தேர்வு / பின்தேர்வு **– மொத்த மதிப்பெண்கள் 50**

**விடையளிப்பதற்கு 60 நிமிடம் ஒதுக்கப்பட்டது.**

- சரியான விடையை தேர்ந்தெடு – 10
- இந்திய வரைபடத்தில் மாநிலங்களைக் குறித்தல் – 40

பூவிருந்தவல்லி, சென்னீர்குப்பம், அரசினர் மேல்நிலைப்பள்ளி , ஆறாம் வகுப்பு மாணவர்கள் முன்தேர்வில் பெற்ற மதிப்பெண் பட்டியல் விவரம்.

**முன்தேர்வு மதிப்பெண் பட்டியல்**

| **வ.எண்** | **மாணவ/மாணவியர் பெயர்** | **முன் தேர்வு மதிப்பெண் (50)** | **100 %** |
|---|---|---|---|
| 1 | செ.சாதனா | 10 | 20% |
| 2 | ரா.அனுராதா குமாரி | 12 | 24% |
| 3 | எம். திவ்ய ஸ்ரீ | 16 | 32% |
| 4 | எஸ். கீர்த்தனா | 11 | 22% |
| 5 | எ.ஆசிஷ் மாலிக் | 9 | 18% |
| 6 | எஸ். சேரன் | 4 | 8% |
| 7 | ஆர்.தனு ஷ் | 6 | 12% |
| 8 | எல். கஜபதி | 7 | 14% |
| 9 | என்.மோகனசந்திரன் | 2 | 4% |
| 10 | ஆர். ஹரிஹரன் | 5 | 10% |
| 11 | ஜி.ஜெகன் | 5 | 10% |
| 12 | பி.லட்சுமி நரசிம்மன் | 6 | 12% |
| 13 | பி. நிதிஷ் | 10 | 20% |
| 14 | இ. தனுஷ்கா | 15 | 30% |
| 15 | இ.ஸ்ருதிகா | 7 | 14% |
| 16 | என்.மணிகண்டன் | 7 | 14% |
| | **மொத்தம் 132 / 800 = 16.5%** | | |

**மதிப்பெண் வீச்சு விவரம்**

மாணவ/ மாணவர்களின் மதிப்பெண் விவரங்கள் பகுத்தாயப்பட்டன. மதிப்பெண் பிரிவு இடைவெளி ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டு மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் உள்ளீடு செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டன.

**மதிப்பெண் பிரிவு இடைவெளி**

0 – 10 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 12

11 – 20 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 4


21 – 30 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 0

31 – 40 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 0

41 – 50 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 0

மொத்தம் 16 மாணவர்கள் முன்தேர்வில், அவர்கள் பெற்ற மதிப்பெண்களைப் பார்க்கும் போது, குறைந்த அளவில் 2 மதிப்பெண்ணும் அதிக அளவாக 16 மதிப்பெண்ணும் பெற்றிருந்தனர். மொத்த மதிப்பெண் 800. மாணவ, மாணவியர் பெற்ற மொத்த மதிப்பெண் 132. இதன் விழுக்காடு 17 சதவீதமாகும். முன்தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டது.

**முன்தேர்வு மதிப்பெண் வீச்சு வரைபடம்**



**முன்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள்**

2,4, 5, 5, 6, 6, 7, 7,7, 9,10,10,11, 12,15,16

| | |
|---|---|
| கூட்டுச் சராசரி | 132 / 800 = 17% |
| இடைநிலை மதிப்பெண் | 7 |
| முகடு | 7 |
| மதிப்பெண் வீச்சு | 16 – 2 =18 |

**கற்பித்தல் செயல்பாடு கள்**

1. விளக்குதல் முறை

2.செய்து கற்றல் முறை

**1.விளக்குதல் முறை**

**செயல்பாடு – 1**

இச்செயல்பாடு முழு வகுப்பிற்குமான செயல்பாடாக அமைக்கப்பட்டது. பீம் 2.0 என்ற படத்தினைக் கொண்டு இந்தியாவில் உள்ள 28 மாநிலங்கள் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை அறிந்து கொள்வதற்காக படத்திலுள்ள உடல் தொகுதி , முக தொகுதி , கைகள் தொகுதி மற்றும் கால்கள் தொகுதியில் கொடுக்கப்பட்ட குறிப்புகள் , ஹைலைட் செய்யப்பட்ட வார்த்தைகள் மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கதைகளைக் கொண்டு மாநிலங்களை எளிதாக நினைவில் வைத்துக் கொள்ளும் வகையில் மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.


FACE MODULE
• I have a big juicy APPLE on my nose.
• A PYTHON snake enters my right nostril and tries to come out of the left nostril. I use a UK imported Umbrella to push the snake out.
• Can you see dwarf HARRY dancing in my mouth?
Following clues will help us learn the states:
Apple is famous in Shimla and Shimla is in HIMACHAL PRADESH
Python snake is for PUNJAB
UK umbrella is for UTTARAKHAND
Harry is for HARYANA
Hi, ....
I am BHEEM 2.0.
I am here to help you learn all the 28 States of India. The highlighted words and the interconnected stories will help you to remember the states easily.
BODY MODULE
• A rat named RAJ is making an UNDERPASS towards my shirt pocket to reach out to the BIG JAR of WHITE BREAD.
• My HEART is at the Centre unlike humans.
• Can you see my favorite MAHARAJA Masala Dosa and CHAPATHIS along with ORANGES in my stomach? I love to eat everything with TOMATO sauce of ELEPHANT brand.
Following clues will help us learn the states:
Rat Raj is for RAJASTHAN
UnderPass is for UTTAR PRADESH (UP)
Big Jar White Bread is for 3 states.
Big is for BIHAR
Jar is for JHARKHAND
White Bread is for WEST BENGAL
Heart indicates the central state. Central state of India is MADHYA PRADESH
Maharaja Masala dosa is for MAHARASHTRA
Chapathi is for CHHATTISGARH
Orange is for ORISSA / ODISHA
Tomato sauce of Elephant brand is for TELANGANA
BHEEM 2.0
ARMS MODULE
• I love to play Guitar. What about you?
Guitar is the clue for GUJARAT
ARMS MODULE
• Can you see a SMART watch in my left hand? I love smart watches. Do you?
Smart watch is the clue for SIKKIM
• NESt is the clue for North Eastern States. Seven Eggs in the nest will help us remember that there are Seven Sister States. Lets learn them using the below incident.
My friends ARUNA & NAGA MADLY MISSed TRIPURA in MEGHA's house in ASSAM.
Following clues will help us learn the states:
Aruna is for ARUNACHAL PRADESH
Naga is for NAGALAND
Madly is for MANIPUR
Miss is for MIZORAM
Tripura is for TRIPURA state
Megha is for MEGHALAYA
Assam is for ASSAM state
LEGS MODULE
• Can you see a WATER bottle on the right side of my belt?
• Just below the water bottle, I have a KANGAROO keychain.
• I have an ANDROID phone in my left dhoti pocket.
• My pet KITTEN, TOM is always around me.
Following clues will help us learn the states:
Water reminds of beaches. State famous for its beaches is GOA
Kangaroo Keychain is for KARNATAKA
Android Phone is for ANDHRA PRADESH
Kitten is for KERALA
Tom is for TAMIL NADU
© Copyright 2021 - Sabarigirinathan. All rights reserved
NOTE
Except for the states of Himachal Pradesh, Madhya Pradesh and Goa, all the other 25 states have their first alphabet same as the first alphabet of the associations made.

**குறிப்பு –I (உடல் தொகுதி)**

**மேலே உள்ள பீம் 2.0 படத்தில் உள்ள குறிப்புகளைக் கொண்டு விளக்கங்கள் கொடுக்கப்பட்டு மாநிலங்களின் அமைவிடத்தை மாணவர்கள் அறிந்து கொள்ள இச்செயல்பாடு மேற்கொள்ளப்பட்டது.**

A **RAT** named **RAJ** made an **UNDERPASS** to reach the **BIG JAR** of **WHITE BREAD** that is in Bheem's shirt pocket.

RAJ என்ற எலி பீம் 2.0 ன் வலது புறத்திலிருந்து இடப்புறமாக சுரங்கப்பாதை வழியாக (UNDER PASS ) வந்து பீம் 2.0 ன் சட்டை பையில் இருந்த ஒரு பெரிய BIG JAR ல் உள்ள WHITE BROAD வந்தடைந்தது என்ற வாக்கியத்தின் மூலம் **நான்கு** மாநிலங்கள் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

RAJ என்பது **ராஜஸ்தான் (Raj**asthan) என்றும் UNDER PASS என்பது **உத்தரப் பிரதேசம் (U**ttar **P**radesh) என்றும் BIG என்பது **பீகார் (Bi**har) என்றும் JAR என்பது **ஜார்க்கண்ட் (Jhar**khand) என்றும் WHITE BROAD என்பது **மேற்கு வங்காளம் (W**est **B**engal) என்றும் மாணவர்களால் அறிந்து கொள்ள முடிந்தது.

**குறிப்பு –II (உடல் தொகுதி)**

You will find Bheem's **HEART** at the **CENTER** Foodie Bheem's stomach when scanned shows his favorite foods such as **MAHARAJA MASALA DOSA, CHAPATHIS** in addition to his favorite fruit **ORANGES**. Weird Bheem prefers everything with **TOMATO sauce** of **ELEPHANT** brand. Bheem has a **WATER bottle** always in handy that is hooked to the right near the belt..

பீம் 2.0 விற்கு அவருடைய இதயம் தான் நடுபகுதி.

பீம் 2.0 ன் வயிற்றில் மகாராஜா மசாலா தோசை ( **MAHARAJA MASALA DOSA),** சப்பாத்தி **(CHAPATHIS)** மற்றும் ஆரஞ்சுப்பழம் **(ORANGES)** இருக்கிறது. பீம் 2.0 எப்பொழுதும் யானை அடையாளம் (**ELEPHANT** brand ) கொண்ட தக்காளி

சாறைத் (**TOMATO sauce)** தான் விரும்புவார். அவர் எப்பொழுதும் தண்ணீர் பாட்டிலை (**WATER bottle** )அவருடைய வலது புறத்தில் பெல்ட் அருகில் தொங்க விட்டிருப்பார் என்ற வாக்கியத்தின் மூலம் **ஆறு** மாநிலங்கள் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

பீம் 2.0 **HEART** at the **CENTER** என்பது **மத்திய பிரதேசம்** ( **Madhya Pradesh** ) ஆகும். **MAHARAJA MASALA DOSA** என்பது மகாராக்ஷ்டிரா (**Maha**rashtra) என்றும் **CHAPATHIS** என்பது சட்டீஸ்கர் (**Chha**ttisgarh) என்றும் **ORANGES** என்பது ஒடிசா (**Or**issa / Odisha) என்றும் **TOMATO sauce ELEPHANT** brand என்பது தெலுங்கானா (**Tel**angana.) என்றும் **WATER bottle** என்பது கோவா (**Goa)** என்றும் மாணவர்களால் அறிந்து கொள்ளமுடிந்தது.

**குறிப்பு –III (முக தொகுதி)**

I have a big juicy APPLE on my nose . A PYTHON snack enters my right nostril and tries to come out of the left nostril,I use a UK imported Umbrella to push the snake out. Can you see dwarf HARRY dancing in my mouth?

என்னுடைய மூக்கில் சாறு நிறைந்த பெரிய ஆப்பிள் (**APPLE**) இருக்கிறது. ஒரு மலைப்பாம்பு( **PYTHON snack** ) என்னுடைய வலப்பக்க மூக்கின் வழியாக நுழைந்து இடப்பக்க மூக்கின் வழியாக வெளியே வர முயற்சி செய்கிறது.அந்த மலைப்பாம்பு இடப்பக்க மூக்கின் வழியாக வெளியே வராமலிருக்க யுனைடேட் கிங்டம் என்ற நாட்டிலிருந்து வாங்கிய குடையைக் (**UK imported Umbrella**) கொண்டு வெளியே தள்ளிவிட்டேன். என்னுடைய வாயில் ஹரி என்ற குள்ளன் (**dwarf HARRY**) நடனம் ஆடுவதை உங்களால் பார்க்க முடிகிறதா? என்ற குறிப்புகளின் மூலம் **நான்கு** மாநிலங்கள் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

APPLE என்பது ஆப்பிள் பழத்திற்கு பெயர் பெற்ற இடம் சிம்லா. சிம்லா உள்ள மாநிலம் ஹிமாசலப்பிரதேசம் (**HIMACHAL PRADESH**) எனவே ஆப்பிள் இருக்கும் இடம் ஹிமாசலப்பிரதேசம் என்றும், **PYTHON snack** என்பது பஞ்சாப் (PUNJAB) UK என்பது உத்தரக்காண்ட் (**UTTARAKAND**). Harry என்பது ஹரியானா (**HARYANA**) என்றும் மாணவர்களால் அறிந்து கொள்ளமுடிந்தது.

**குறிப்பு – IV (கைகள் தொகுதி)**

I have to play Guitar, What about you? Guitar is the clue for GUJARAT.

நான் கித்தார் வாசித்துக் கொண்டு இருக்கிறேன். நீங்கள் என்ன செய்கிறீர்கள் ? என்று பீம் 2.0 கேட்கிறார் என்ற குறிப்பின் மூலம் Guitar என்பது குஜராத் (**GUJARAT**) என்றும் அந்த **ஒரு** மாநிலம் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை மாணவர்களால் அறிந்து கொள்ளமுடிந்தது.

**குறிப்பு – V (கால்கள் தொகுதி)**

Can you see a WATER bottle on the right side of my belt?Just below the water bottle, I have a KANGAROO Keychain. I have an ANDROID phone in my left Dhoni pocket.
My pet KITTEN ,TOM is always around one.

என்னுடைய வலது புறத்தின் பெல்ட் அருகில் தண்ணீர் பாட்டிலை தொங்க விட்டிருப்பதை பார்த்தீர்களா? அந்தப் பாட்டிலுக்குக் கீழே கங்காரு சாவிக்கொத்து (**KANGAROO Keychain** )உள்ளது. எனது இடுப்பின் இடது புறத்தில் உள்ள தோனி பையில் ஆன்ட்ராய்டு போன் (**ANDROID phone** ) உள்ளது.எனது பூனைக் குட்டி **(KITTEN)** டாம் (**TOM**) எப்பொழுதும் என் காலை சுற்றிக் கொண்டே இருக்கும் என்ற குறிப்பின் மூலம் **நான்கு** மாநிலங்கள் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

Kangaroo Keychain என்பது கர்நாடகா (KARNATAKA).Android Phone என்பது ஆந்திரப்பிரதேசம் (ANDHRA PRADESH). **Kitten** என்பது கேரளா (KERALA).**Tom** என்பது தமிழ்நாடு (TAMILNADU) என்று மாணவர்களால் அறிந்து கொள்ளமுடிந்தது.

**குறிப்பு – VI (கைகள் தொகுதி)**

Can you see a SMART Watch in my left hand? Smart watch is the clue for SIKKIM.
NEST is the clue for North Eastern States.Seven Eggs in the nest will help us remember that there are Seven Sister States. My Friends Aruna , Naga, Mani & Megha Missed The train connecting Tirpura and Assam.

பீம் 2.0 வின் இடது கையில் ஸ்மார்ட் வாட்ச் மற்றும் ஏழு முட்டைகள் உள்ள ஒரு கூடு உள்ளதை பார்க்க முடிகிறதா? NEST என்பது வடகிழக்கு மாநிலங்களை குறிக்கிறது.கூட்டில் உள்ள ஏழு முட்டைகள் ஏழு சகோதரி மாநிலங்களை குறிக்கிறது.

எனது நண்பர்கள் அருணா, நாகா, மணி மற்றும் மேகா ஆகியோர் திரிபுரா மற்றும் அஸ்ஸாமை இணைக்கும் ரயிலை தவறவிட்டனர் என்ற குறிப்பின் மூலம் **எட்டு** மாநிலங்கள் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

ஸ்மார்ட் வாட்ச் (**SMART Watch)** என்பது சிக்கிம் **(Sikkim**) ஆகும். Aruna என்பது அருணாச்சலப் பிரதேசம் **(ARUNACHAL PRADESH**) என்றும் Naga என்பது நாகாலாந்து **(NAGALAND**) என்றும் Mani என்பது மணிப்பூர் (**MANIPUR)** என்றும் Megha என்பது மேகாலயா (**MEGHALAYA**) என்றும் Missed என்பது மிசோரம் (MIZORAM) என்றும் Tripura என்பது திரிபுரா மாநிலத்தையும் (**TRIPURA states**) என்றும் Assam என்பது அஸ்ஸாம் மாநிலத்தையும் (**ASSAM state**.) குறிக்கிறது என்று மாணவர்களால் அறிந்து கொள்ளமுடிந்தது.

இச்செயல்பாடுகளின் மூலம் 28 மாநிலங்கள் அமைந்துள்ள திசை மற்றும் அமைவிடத்தை அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடனும்,எளிதாகவும், மகிழ்ச்சியோடும் கற்றுக் கொண்டனர். இச்செயல்பாட்டின் விளைவினை பின்தேர்வில் காணமுடிந்தது. முன்தேர்வில் மதிப்பெண் பெறாத மாணவர்களும் பின்தேர்வில் மதிப்பெண்கள் பெறும் நிலையை அடைந்தனர்.



**செயல்பாடு- 2**

**இந்திய வரைபடத்தில் மாநிலங்களை ஒத்த உருவங்களோடு ஒப்பிடுதல்.**

இச்செயல்பாடுகளின் மூலம் , இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களின் வரி வடிவத்திற்கு ஏற்ற (OUT LINE) விலங்குகள் மற்றும் பறவைகளின் (கிட்டதட்ட தோராயமாக) உருவங்களைக் கொண்டு ஒன்று, இரண்டு ,மூன்று, நான்கு மற்றும் ஏழு என மாநிலங்களை ஒன்றிணைத்து கற்பித்ததின் காரணமாக மாணவர்கள் எளிதாக ஒவ்வொரு மாநிலத்தின் பெயர்களை கூறும் வகையில் இச்செயல்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் மற்றும் இரண்டாம் செயல்பாடுகளினால் அனைத்து மாணவர்களும் கற்றலில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.


இச்செயல்பாட்டில் 28 மாநிலங்களையும் 12 உருவங்களைக் கொண்டு கற்றுத் தரப்பட்டன. 12 உருவங்களும் மாணவர்களுக்கு மிகவும் பரிட்சமானதாக இருந்ததால் முழு வகுப்பு மாணவர்களும் எளிதாகக் கற்றுக் கொண்டனர். **பெண்ணின் முகம்**, மீன், யானை, நாய்க் குட்டி, கோழி, கோழிக்குஞ்சு, மரக்கொத்திப் பறவை, ஒட்டகம், **பூனை**, **ஆந்தை**, வான் கோழி, சிங்கம் போன்றவைகளைப் பயன்படுத்தி இச்செயல்பாடு செயல்படுத்தப்பட்டது.



<table>
<tr><th>வ.எண்</th><th>மாநிலங்கள்</th><th>ஒற்றுமை (Similarity)</th></tr>
<tr><td>1</td><td>

தமிழ்நாடு</td><td>பெண்ணின் முகம்

</td></tr>
<tr><td>2</td><td>
கேரளா</td><td>மீன் போன்ற அமைப்பு</td></tr>
<tr><td>3</td><td>

கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திர பிரதேசம்,கோவா.</td><td>யானை உருவம்</td></tr>
<tr><td>4</td><td>

குஜராத், மகாராஷ்டிரா</td><td>நாய்க் குட்டி</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 5 | <br> லடாக் , ஜம்மு& காஷ்மீர் | கோழி |
| 6 | <br><br>பஞ்சாப் | கோழிக்குஞ்சு |
| 7 | <br><br>மேற்கு வங்காளம், ஒடிசா | மரக்கொத்திப் பறவை |
| 8 | <br><br>மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் | ஒட்டகம் |

| | | |
|---|---|---|
| 9 | <br>உத்தரப்பிரதேசம்,<br>உத்தரக்காண்ட் | பூனை<br> |
| 10 | <br>பீகார், ஜார்க்கண்ட் | <br>ஆந்தை |
| | <br>ஹிமாசலப்பிரதேசம், ஹரியானா<br>ராஜஸ்தான் | வான் கோழி |
| | <br>வடகிழக்கு மாநிலங்கள் | <br>சிங்கம் |

**செயல்பாடு- 3**

**இந்தியாவின் 28 மாநிலங்களையும் ஒரே கோட்டினால் இணைத்தல்.**

இந்திய வரைபடத்தில் 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள் மட்டுமின்றி நேபாளம், வங்காள தேசம் போன்ற நாடுகளும் உள்ளன. இதில் மிகச் சிறியதான கோவா மாநிலம் உள்ளன.அனைத்து மாநிலங்களையும் ஒரே கோட்டினால் இணைத்து பெயர்களை வரிசையாக எழுதச்சொல்லி இச்செயல்பாட்டினை மேற்கொள்ளும் பொழுது 28 மாநிலங்களையும் கண்டறிந்து மேலும் கற்றலை மேம்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பாக இருந்தது.




| வ.எண் | மாநிலங்கள் | சிறப்புகள் |
|---|---|---|
| 1 | லடாக் | Little Tibet (குட்டி திபெத்) |
| 2 | ஜம்மு & காஷ்மீர் | Paradise on Earth(பூமியில் சொர்க்கம்) |
| 3 | பஞ்சாப் | Land of Five Rivers<br>ஐந்து நதிகள் கொண்ட நாடு |
| 4 | ராஜஸ்தான் | Land of Kings (மன்னர்களின் நிலம்) |
| 5 | குஜராத் | Jewel of Western India<br>மேற்கு இந்தியாவின் நகை |
| 6 | மகாராஷ்டிரா | Manhattan of India<br>இந்தியாவின் மன்ஹாட்டன் |
| 7 | கோவா | Rome of the East (கிழக்கின் ரோம்) |
| 8 | கர்நாடகா | The Land of sandalood<br>சந்தன மரங்களின் தேசம் |
| 9 | கேரளா | Land of Spices<br>வாசனைப்பொருட்களின் நிலம் |
| 10 | தமிழ்நாடு | The Land of Temples<br>கோவில்களின் பூமி |
| 11 | ஆந்திரப் பிரதேசம் | Rice Bowl of India ,Kohinoor of India.<br>இந்தியாவின் அரிசி கிண்ணம்,<br>இந்தியாவின் கோஹினூர். |
| 12 | ஒடிசா | The land of Lord Jagannath.. The soul of India<br>ஜகந்நாதரின் பூமி.இந்தியாவின் ஆன்மா |
| 13 | மேற்கு வங்காளம் | The largest mangrove forest in the world in the Sunderbans.<br>உலகின் மிகப்பெரிய சதுப்புநிலக் காடு<br>சுந்தரவனக் காடு |
| 14 | சிக்கிம் | Brother of 7 Sisters<br>7 சகோதரிகளின் சகோதரர் |

| | | |
|---|---|---|
| 15 | மேகாலயா | Abode of clouds<br>மேகங்களின் உறைவிடம் |
| 16 | திரிபுரா | Angkor Wat of the North-East,<br>வடகிழக்கு அங்கோர் வாட் |
| 17 | மிசோரம் | country of people living in hills<br>மலைகளில் வாழும் மக்களின் நாடு |
| 18 | மணிப்பூர் | Switzerland of India,<br>இந்தியாவின் சுவிட்சர்லாந்து, |
| 19 | நாகாலாந்து | The Land of Festivals<br>திருவிழாக்களின் தேசம் |
| 20 | அருணாச்சலப் பிரதேசம் | The land of rising sun<br>சூரியன் உதிக்கும் நிலம் |
| 21 | அசாம் | The land of "Blue Hills and Red River "<br>"நீல மலைகள் /சிவப்பு நதியின் நிலம்" |
| 22 | பீகார் | The land of monasteries.<br>மடங்களின் நிலம் |
| 23 | உத்தரப்பிரதேசம் | The heart of Mahabharata war<br>மகாபாரதப் போரின் இதயம் |
| 24 | உத்தரகாண்ட் | Land of the Gods OR Devbhoomi<br>கடவுள்களின் நிலம் அல்லது தேவபூமி |
| 25 | இமாச்சலப் பிரதேசம் | "Abode of Snow."பனியின் உறைவிடம். |
| 26 | ஹரியானா | Forest land of Hari ஹரியின் வன பூமி |
| 27 | மத்தியப் பிரதேசம் | Central Province மத்திய மாகாணம் |
| 28 | தெலுங்கானா | Trilinga desha ("land of three lingas)<br>("மூன்று லிங்கங்களின் தேசம்) |
| 29 | சத்தீஸ்கர் | meaning "thirty-six forts<br>"முப்பத்தாறு கோட்டைகள் |
| 30 | ஜார்க்கண்ட் | "The land of forest" காடுகளின் நிலம் |

**2.செய்து கற்றல் முறை**

**செயல்பாடு – 2 ல் விளக்கியதை போன்று இந்திய வரைபடத்தில் மாநிலங்களை வரையச் செய்தல்.**

ஆறாம் வகுப்பில் பயிலும் 16 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்திய புறவரி படம் கொடுக்கப்பட்டது. மாணவர்கள் தங்களை மேலும் மேம்படுத்திக் கொள்ள செயல்பாடு – 2 ல் விளக்கியதை போன்று இந்திய வரைபடத்தில் மாநிலங்களை வரையச் செய்ததின்மூலம் வலுவூட்டும் செயல் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது.



**பின்தேர்வு**

முன்தேர்வுக்கு வழுங்கப்பட்ட வினாத்தாளே பின்தேர்வுக்கும் வழுங்கப்பட்டது. முன்தேர்வில் சரியாக விடையெழுதாத மாணவர்கள், பின்தேர்வில் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்திருந்தனர். பின்தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள், அவர்களது முன்தேர்வில் பெற்ற மதிப்பெண்களோடு ஒப்பிட்டுப் பார்க்க உதவியது. ஆயினும், மாணவர்களை முழு மதிப்பெண் பெறச்செய்வதில், இந்தச்செயலாய்வு 90% இலக்கை எட்டியுள்ளது.

**பின்தேர்வில் மாணவ/ மாணவியர்கள் பெற்ற மதிப்பெண் பட்டியல் விவரம்**

| வ.எண் | மாணவ/மாணவியர் பெயர் | பின் தேர்வு மதிப்பெண் (50) | 100 % |
|---|---|---|---|
| 1 | செ.சாதனா | 45 | 90% |
| 2 | ரா.அனுராதா குமாரி | 43 | 86% |
| 3 | எம். திவ்ய ஶ்ரீ | 46 | 92% |
| 4 | எஸ். கீர்த்தனா | 44 | 88% |
| 5 | எ.ஆசிஷ் மாலிக் | 39 | 78% |
| 6 | எஸ். சேரன் | 29 | 58% |
| 7 | ஆர்.தனு ஷ் | 35 | 70% |
| 8 | எல். கஜபதி | 37 | 77% |
| 9 | என்.மோகனசந்திரன் | 25 | 50% |
| 10 | ஆர். ஹரிஹரன் | 30 | 60% |
| 11 | ஜி.ஜெகன் | 40 | 80% |
| 12 | பி.லட்சுமி நரசிம்மன் | 41 | 82% |
| 13 | பி. நிதிஷ் | 37 | 74% |
| 14 | இ. தனுஷ்கா | 31 | 62% |
| 15 | இ.ஸ்ருதிகா | 32 | 64% |
| 16 | என்.மணிகண்டன் | 42 | 84% |
| | **மொத்தம் = 596/ 800 = 74.5%** | | |

**மதிப்பெண் வீச்சு விவரம்**

மாணவ/ மாணவர்களின் மதிப்பெண் விவரங்கள் பகுத்தாயப்பட்டன. மதிப்பெண் பிரிவு இடைவெளி ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டு மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் உள்ளீடு செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டன.

**மதிப்பெண் பிரிவு இடைவெளி**

0 - 10 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 0

11 – 20 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 0

21 - 30 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 3

31 - 40 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 7

41 - 50 மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை – 6

**பின்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள்**

25, 29, 30, 31, 32,35, 37,37,39, 40, 41, 42,43, 44, 45, 46


| | |
|---|---|
| கூட்டுச் சராசரி | 596 / 800 = 75% |
| இடைநிலை மதிப்பெண் | 38 |
| முகடு | 37 |
| மதிப்பெண் வீச்சு | 46 - 25= 21 |

**பின்தேர்வுப் பகுப்பாய்வு**

பின்தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண் குறைந்த அளவாக 25 மதிப்பெண்ணும் அதிக அளவாக 46 மதிப்பெண்ணும் இருந்தன. பெற்ற மொத்த மதிப்பெண் 800 க்கு 596 ஆகும். மாணவர்கள் அவர்களின் மதிப்பெண் சராசரி 75 சதவீதமாகும்.


## முன்தேர்வு – பின்தேர்வுப் பகுப்பாய்வு

**மாணவர்களின் முன்தேர்வு மதிப்பெண் வீச்சு வரைபடம்**




மாணவர்கள் பெற்ற மதிப்பெண் சராசரி 17 சதவீதமாகும்

**மாணவர்களின் பின்தேர்வு மதிப்பெண் வீச்சு வரைபடம்**




மாணவர்கள் பெற்ற மதிப்பெண் சராசரி 75 சதவீதமாகும்

**முன்தேர்விலும் பின்தேர்விலும் மாணவர்கள் பெற்ற மதிப்பெண் ஒப்பீடு விவரம்**

| வ. எண் | மாணவ/ மாணவியரின் பெயர்கள் | மதிப்பெண்கள் | | |
|---|---|---|---|---|
| | | முன்தேர்வு (50) | பின்தேர்வு (50) | மதிப்பெண் வேறுபாடு |
| 1 | செ.சாதனா | 10 | 45 | 35 |
| 2 | ரா.அனுராதா குமாரி | 12 | 43 | 31 |
| 3 | எம். திவ்ய ஸ்ரீ | 16 | 46 | 30 |
| 4 | எஸ். கீர்த்தனா | 11 | 44 | 33 |
| 5 | எ.ஆசிஷ் மாலிக் | 9 | 39 | 30 |
| 6 | எஸ். சேரன் | 4 | 29 | 25 |
| 7 | ஆர்.தனு ஷ் | 6 | 35 | 29 |
| 8 | எல். கஜபதி | 7 | 37 | 30 |
| 9 | என்.மோகனசந்திரன் | 2 | 25 | 23 |
| 10 | ஆர். ஹரிஹரன் | 5 | 30 | 25 |
| 11 | ஜி.ஜெகன் | 5 | 40 | 35 |
| 12 | பி.லட்சுமி நரசிம்மன் | 6 | 41 | 35 |
| 13 | பி. நிதிஷ் | 10 | 37 | 27 |
| 14 | இ. தனுஷ்கா | 15 | 31 | 16 |
| 15 | இ.ஸ்ருதிகா | 7 | 32 | 25 |
| 16 | என்.மணிகண்டன் | 7 | 42 | 35 |

**முன்தேர்வு –பின்தேர்வுப் ஒப்பீடு**

மொத்தம் 16 மாணவர்கள் முன்தேர்வில், அவர்கள் பெற்ற மதிப்பெண்களைப் பார்க்கும்போது, குறைந்த அளவில் 2 மதிப்பெண்ணும் அதிக அளவாக 16 மதிப்பெண்ணும் பெற்றிருந்தனர். அவர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்கள், 800க்கு 132 ஆகும். அவர்களின் மதிப்பெண் சராசரி 17 சதவீதமாகும். பின்தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண் குறைந்த அளவாக 25 மதிப்பெண்ணும் அதிக அளவாக 46 மதிப்பெண்ணும் இருந்தன. பெற்ற மொத்த மதிப்பெண் 800க்கு 596 ஆகும். மாணவர்கள் அவர்களின் மதிப்பெண் சராசரி 75 சதவீதமாகும்.

முன்தேர்வு மற்றும் பின்தேர்வு மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, முன்தேர்வில் நூற்றுக்கு 17 சதவீதமே சராசரியாக இருந்தது. ஆனால், பின்தேர்வில் நூற்றுக்கு 75 சதவீதம் சராசரியாக அமைந்தது. முன்தேர்வுக்கும் பின்தேர்வுக்கும் இடையிலான முன்னேற்ற வேறுபாடு 58 சதவீதமாகும். பின்தேர்வில் மதிப்பெண் கூடியமைக்குக் காரணம், கையாளப்பட்ட கற்பித்தல் உத்திகளாகும். மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளும் வகையில் கற்றல் செயல்பாடுகள் அமைந்திருந்தன.


இச்செயலாய்வின் வாயிலாக, மாணவர்கள் இந்திய மாநிலங்களை மிக எளிதாக அடையாளம் கண்டு மாநிலங்களின் பெயர்களை கூறுவார்கள் என்பது உறுதி.

**மாணவர்களின் முன்னேற்றம்:**

முன்தேர்வு, பின்தேர்வு மதிப்பெண் பட்டியலை உற்றுநோக்கும் போது, மாணவர்களிடம் நல்ல முன்னேற்றம் இருப்பதைக் காணமுடிகிறது.

மாணவர்களை விட மாணவிகளே கூடுதல் மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர்.

**முன்தேர்வு, பின்தேர்வுப் ஒப்பீடு வரைபடம்**




**முன்தேர்வு, பின்தேர்வுப் ஒப்பீடு வரைபடம்**

இவ்வரைபடத்தின் வாயிலாக மாணவர்களின் மதிப்பெண் முன்தேர்வில் 132 லிருந்து பின்தேர்வில் 596 ஆக உயர்ந்திருப்பதைக் காணமுடிகிறது.

**தீர்வுகள்**

முன்தேர்வின் மாணவ, மாணவியர் பெற்ற மொத்த மதிப்பெண் 132. இதன் விழுக்காடு 17 சதவீதம் ஆகும். பின்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மொத்த மதிப்பெண் 596. இதன் விழுக்காடு 75 சதவீதம் ஆகும். முன்தேர்வில் 0 முதல் 10 வரை மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. பின்தேர்வில் 31 முதல் 40 வரை மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

**பரிந்துரைகள்**

ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமின்றி மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் இச்செயலாராய்ச்சியைக் பரவலாக்குதல் மூலம் மாணவர்கள் வருங்காலத்தில் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களுக்கு செல்ல நேர்ந்தால் அம்

மாநிலத்தின் தட்பவெட்ப நிலை அறிந்து உணவு , உடை மற்றும் வேகமாக நகரும் உலகத்தை உணர்த்துவதற்கான திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு பயனுள்ளதாக அமையும்.ஒரு நாட்டின் வரலாற்று நிகழ்வுகளை அதன் புவியியல் கூறுகளே பெரிதும் நிர்ணயிக்கின்றன. எனவே இந்திய மாநிலங்களின் அமைவிடத்தை அறிந்து கொள்வதோடு ஒவ்வொரு மாநிலத்தின் வானிலை மற்றும் காலநிலை, நீர் வளங்கள்,ஆறுகள்,மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள், காடு மற்றும் வன உயிரினங்கள் ,வேளாண் முறைகள் போன்றவற்றையும் அறிந்து கொள்ளச்செய்வது சிறப்பானதாகும்.

**முடிவுரை**

இந்தியா பல்வேறு கலாச்சாரங்கள், பாரம்பரியம் ,மதங்கள், ஆன்மீகம், தத்துவம், ஆகியவற்றைக் கொண்ட ஒரு சிறந்த நாடு, ஆனால் அனைவரும் ஒன்றாக வாழ்கின்றோம். "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற பெருமையை கொண்டது இந்தியா. அத்தகைய பெருமை வாய்ந்த இந்தியாவின் மாநிலங்களை அறிந்து கொள்ள பல்வேறு செயல்பாடுகளின் மூலம் செய்துக் காட்டி விளக்கப்பட்டதனால் மாணவர்கள் எளிதாக இந்திய மாநிலங்களின் பெயர்களைக் கூறவும் ,மாநிலங்கள் அமைந்துள்ள திசைகளை தெரிந்து கொள்ளவும், மாநிலங்களின்அமைவிடத்தை குறித்துக் காட்டவும், மாநில எல்லைக் கோடுகளைக் கொண்டு மாநிலங்களின் பெயர்களை சரியாக கூறவும் இச்செயலாராய்ச்சி பயனுள்ளதாக இருந்தது.முன் தேர்வைக் காட்டிலும் பின் தேர்வில் மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெற்றனர்.இச்செயலாய்வில் மேற்கொண்ட செயல்பாடுகள் சிறப்பானதாக அமைந்தது.

**பின்னிணைப்பு 1**

**முன்தேர்வு/ பின்தேர்வு வினாத்தாள் ( மொத்த மதிப்பெண்கள்– 50)**

**பின்னிணைப்பு**

**முன்தேர்வு/ பின்தேர்வு வினாத்தாள் ( மொத்த மதிப்பெண்கள்– 50)**

**காலம் –1 மணி**

**கொள்குறி வினாக்கள்.**

சரியானப் பதிலைத் தேர்ந்தெடுக்கவும். (மதிப்பெண்கள் –1x10=10)

I 1.இந்தியாவின் மிகப்பெரிய மாநிலம் எது?

அ. மத்திய பிரதேசம் ஆ. மகாராஷ்டிரா

இ. ராஜஸ்தான் ஈ. உத்தரப்பிரதேசம்

2. இந்தியா எந்த நாட்டுடன் மிக நீண்ட எல்லையைக் கொண்டுள்ளது?

அ. சீனா ஆ. பாகிஸ்தான்

இ. நேபாளம் ஈ. பங்களாதேஷ்

3. இதில் எந்த மாநிலம் பங்களாதேஷுடன் மூன்று பக்கங்களிலும் சூழப்பட்டுள்ளது?

அ. திரிபுரா ஆ. மிசோரம்

இ. நாகாலாந்து ஈ. மணிப்பூர்

4. சிக்கிம் தனது எல்லையை எத்தனை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்கிறது?

அ. ஒன்று பி. இரண்டு சி. மூன்று டி. நான்கு

5. எந்த மாநிலம் பெரும்பாலான மாநிலங்களுடன் எல்லைகளைக் கொண்டுள்ளது?

அ. மத்தியப் பிரதேசம் ஆ. உத்தரப்பிரதேசம்

இ. சத்தீஸ்கர் ஈ. ஜார்க்கண்ட்

6. பின்வருவனவற்றில் பரப்பளவில் எந்த மாநிலம் பெரியது?

அ. அருணாச்சல பிரதேசம் ஆ. அசாம்

இ. மேகாலயா ஈ. நாகாலாந்து

7. எந்த மாநிலத்தின் பரப்பளவு மாநிலங்களின் பரப்பளவை விட அதிகமாக இல்லை?

அ. ராஜஸ்தான் ஆ. மத்தியப் பிரதேசம்

இ. மகாராஷ்டிரா ஈ. உத்தரப்பிரதேசம்

8. பின்வரும் எந்த மாநிலத்துடன் கோவா எல்லையைக் கொண்டுள்ளது?

அ. மகாராஷ்டிரா மட்டும்     ஆ. மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா

இ. கர்நாடகா மட்டும்     ஈ. கர்நாடகா மற்றும் கேரளா

9. மகாராஷ்டிரா தனது எல்லையை எத்தனை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்கிறது?

அ. நான்கு     ஆ. ஐந்து

இ. ஆறு     ஈ. ஏழு

10. பின்வரும் எந்த மாநிலம் ஆந்திரப் பிரதேசத்துடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளவில்லை?


அ. ஒடிசா     ஆ. சத்தீஸ்கர்

இ. கர்நாடகா     ஈ. மத்திய ப்பிரதேசம்

II. எண்களுக்குரிய மாநிலத்தின் பெயரை எழுதவும்.

(ஏதேனும் பதினொன்று மாநிலங்கள்)

(மதிப்பெண்கள் –(11x1=11)



III. (மதிப்பெண்கள் –10 x 1 =10)




| | | | |
|---|---|---|---|
| ராஜஸ்தான் | உத்தரகாண்ட் | ஜம்மு & காஷ்மீர் | பஞ்சாப் |
| குஜராத் | லடாக் | மத்திய பிரதேசம் | ஹிமாச்சலப் பிரதேசம் |
| உத்தரப் பிரதேசம் | ஹரியானா | | |


IV. (மதிப்பெண்கள் – 10 x 1 = 10)




| | | | |
|---|---|---|---|
| மகாராஷ்டிரா | சத்தீஸ்கர் | ஒடிசா | ஜார்கண்ட் |
| ஆந்திரப் பிரதேசம் | தெலுங்கானா | தமிழ்நாடு | கர்நாடகம் |
| பீகார் | கேரளா | | |

V. (மதிப்பெண்கள் – 9x1=9 )






| | |
|---|---|
| அஸ்ஸாம் | மேற்கு வங்காளம் |
| நாகாலாந்து | மேகாலயா |
| திரிபுரா | அருணாசலப் பிரதேசம் |
| மிசோரம் | மணிப்பூர், |
| சிக்கிம் | |

**பின்னிணைப்பு – 2**

**நிழற்படங்கள்**

| | |
|---|---|
|  |  |
| இந்திய மாநிலங்கள் பற்றி அறிமுகம் செய்தல் | பீம் 2.0 தொகுதி பற்றி விளக்கப்பட்டது. |

| | |
|---|---|
|  |  |
| கற்பித்தல் செயல்பாடுகள் | மாணவர்கள் பின்தேர்வு எழுதுகிறார்கள் |